



சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் (25.11.2023) நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் "நிறுவனங்களின் நாயகர் கலைஞர் சிறப்பு புகைப்பட கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழா மலரை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே. என். நேரு, முனைவர் க.பொன்முடி, எஸ். ரகுபதி, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், செஞ்சி. கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணைமேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பி.பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இல்லத்திலிருந்து கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு அழைப்பு விடுத்து நடக்கும் இளைஞர்களின் "மாநில உரிமை மீட்பு இருசக்கர வாகனப் பேரணியில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கலந்து கொண்டார். உடன் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் பணிகள் நிலைக் குழுத் தலைவருமான சிற்றரசு, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், பகுதி கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை மற்றும் கழக முன்னணியினர் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2023) சென்னையில் நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பாத்திமா முசாபர் அவர்களின் மகள் ஃபசிலா பாத்திமா – முயிஸ் அகமது ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஜே.எம்.எச். ஹசன் மௌலானா, அப்துல் சமது, முஸ்லிம் லீக் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி,

# மருத்துவ வரலாற்றிலேயே 5 வாரங்களில் 8,380 சிறப்பு மழைக்கால மருத்துவ முகாம்கள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ.27-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (25.11.2023) சென்னை தேனாம்பேட்டை மண்டலம், வார்டு -118, கௌடியா மடம் சாலை, அம்மையப்பன் சந்தில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம்அவர் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் குறித்து தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே மக்கள் நல்வாழ்வுத்துறையும், உள்ளாட்சி அமைப்புகளும் ஒருங்கிணைந்து மழைக்கால மருத்துவ சிறப்பு முகாம்களை நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் கடந்த மாதம் 23.10.2023 தொடங்கி தற்போது வரை உள்ள சனிக்கிழமைகளில் சிறப்பு மருத்துவ முகாம்கள் வாரம்தோறும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

5வது வார மருத்துவ முகாம்கள் தொடங்கி வைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு வாரமும் 1000 முகாம்கள் என்று தொடங்கி 2000-த்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடைபெற்று வருகிறது. அவசியத்திற்கு ஏற்ப அதிகரிக்கப்பட்டு இம்மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை மொத்தம் 8,380 மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டுள்ளது. மருத்துவத் துறை வரலாற்றிலேயே 8000-த்திற்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருப்பது இதுவே முதல்முறை.



எனவே டிசம்பர் 30.12.2023 அன்று மழைக்கால மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு முடிவுற இருக்கிறது. பொதுமக்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களாகிய நீங்கள் ஏற்படுத்திய விழிப்புணர்வின் காரணமாக ஒவ்வொரு முகாம்களிலும் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் ஒவ்வொரு வாரம் முகாம்களிலும் கலந்து கொண்டு பயன்பெற்று இருக்கிறார்கள்.

எனவே ஒவ்வொரு வாரத்திற்கும் காய்ச்சல், சளி, இருமல், தொண்டை வலி போன்றவைகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் டெங்கு காய்ச்சல், இன்புளுயன்சா, சிக்கன் குனியா போன்ற வைரஸ் காய்ச்சல்களும், தொண்டை இருமல் போன்ற பல்வேறு வகையிலான மழைக்கால நோய்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டு வருகின்றனர். இன்னும் டிசம்பர் மாதங்களில் சனிக்கிழமைகள் சேர்த்து 5 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை மண்டலத்திற்கு 3 என்கின்ற வகையில் 15 மண்டலங்களில் 45 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு முகாம்களில் 315 மருத்துவர்கள், 635 செவிலியர்கள், இந்த பணிகளில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு உள்ளார்கள். மேலும் மாநகராட்சிகளில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்களிலும் இன்று நிலவேம்பு குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் மாநகராட்சி வசம் 1,500 கிலோ நிலவேம்பு குடிநீர் பொடி கையிருப்பில் உள்ளது. 32 டன் பிளிச்சிங் பவுடரும், லைசால் தேவையான கையிருப்பு இருக்கிறது. கொசு மருந்து தெளிப்பான்கள் 758 கையிருப்பில் உள்ளது. புகை மருந்து அடிக்கும் இயந்திரம் 294 கையிருப்பில் உள்ளது. இந்த முகாம்கள் பொறுத்தவரை சென்னை மாநகராட்சி மிக சிறப்பாக செய்து சென்னை மாநகர மக்களின் நலனை பாதுகாத்து வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் தீவிர வழிகாட்டுதலின்படி, மழைநீர் வடிகால்களை புதியதாக கட்டியிருப்பது 800 கிலோ மீட்டருக்கும் மேல் ஆகும். இதுவரை சென்னை மாநகராட்சிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களின் அளவு 2100 கி.மீ என்று இருக்கும்போது இந்த 2 ஆண்டில் மட்டும் 800 கி.மீ என்கின்ற அளவில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டிருக்கிறது. மேலும் சென்னையில் இருக்கின்ற ஒட்டுமொத்த மழைநீர் வடிகால்வாய்களில் 40% கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் கட்டப்பட்டு இருப்பது வரலாற்று சிறப்பு. 2015 டிசம்பர் மாதம் ஏற்பட்ட மழையின் பாதிப்பு மக்கள் நன்கு உணர்ந்து இருப்பதால் அதற்கு அடுத்த ஆண்டுகளில் எங்கே சென்றாலும் மக்கள் பிரதிநிதிகளாகிய எங்களிடம் பொதுமக்கள் மழை வரப்போகிறது பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்வார்கள். தற்போது இந்த ஆண்டு மழை வந்தும் எந்த பாதிப்பும் இல்லை என்று பொதுமக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

**டெங்கு காய்ச்சல்!**

டெங்கு காய்ச்சல்களை பொறுத்தவரை இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போது வரை உள்ள பாதிப்பு 7,059. இந்த பாதிப்பு கடந்த ஆண்டுகளை மிகக் குறைவு. மேலும் டிசம்பர் 15ந்தேதிக்குப் பிறகு டெங்கு காய்ச்சல் பாதிப்பு மிகக் குறைவாக இருக்கும். தற்போது டெங்கு தினசரி பாதிப்பு 40 முதல் 50 வரை ஏற்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது வரை உள்ள பாதிப்புகள் 7,059 ஆகும்.

**நாய்க்கடி பாதிப்பு!**

சென்னை இராயபுரத்தில் தெருநாய் கடித்து 27 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உடனடியாக மாநகராட்சி அலுவலகத்திற்கோ, உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கோ தொடர்பு கொண்டால் சம்பந்தப்பட்ட கால்நடைத்துறையின் மூலம் வெறிநாய்கள் பிடிப்பார்கள். அது சம்பந்தப்பட்ட விழிப்புணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்படும்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, துணை ஆணையாளர் (கல்வி) திருமதி.ஷரண்யா அறி,, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.டி.சி.செல்வவிநாயகம், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், மாமன்ற உறுப்பினர் திருமதி.யு.மல்லிகா, மண்டல அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ஆயிம் விளக்கு கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் - நல உதவிகள்!

### பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை அறிக்கை!

சென்னை, நவ. 27-

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி சார்பில் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் கழகத் தலைவர் அவர்களின் அயராத உழைப்பால் தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாகவும் முதன்மையான முதல்வராகவும் செயல்பட்டு வரும் கழகத் தலைவர் அவர்களது வழியில் அயராத உழைப்பு இயக்கத்தின் இதயமாகவும் இளைஞர்கள் இதயமாகவும் திகழும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு தொடர் நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

பகுதியில் உள்ள அனைத்து வட்டங்களிலும் ஒவ்வொரு வீதி தோறும் நாளை (27-11- 2023) காலை முதல் மாலை வரை கழக கொடி தோரணங்கள் கட்டி ஒலிபெருக்கி அமைத்து கழக இரு வண்ணக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி பள்ளி மாணவ மாணவிகளுக்கு பேனா பென்சில் நோட்டுப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்

நிகழ்ச்சிகளின் விவரம்

111 வது வட்டம் தலைமை: ஆர்.பாபு (வட்ட செயலாளர்) 1,நாள் (27-11-2023)திங்கட்கிழமை காலை 10 மணி இடம் : அஜிஸ் முல்க் 2 வது தெரு 5 வது தெரு சந்திப்பு கழக கொடி யேற்றி கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி பள்ளி மாணவ மாணவிகளுக்கு உபகரணங்கள் வழங்கப்படும், அஜிஸ் முல்க் 3 வது தெரு கழக கொடி தோரணங்கள் கட்டி ஒலிபெருக்கி அமைத்து கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்படும் . முர்ஸ் சாலை சுதந்திர நகர் தமிழ் நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் கழக கொடி தோரணங்கள் கட்டி ஒலிபெருக்கி அமைத்து கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்படும்

113 ஆ வது வட்டம்த்தில் நுங்கை பா.மகேஷ் (வட்டச் செயலாளர) தலைமையில் (27-11- 2023) காலை:10:00 மணி 113 வது வட்டத்தில் உள்ள அனைத்து தெருவிலும் கழக கொடி தோரணங்கள் கட்டி ஒலிபெருக்கி அமைத்து கழக இருவண்ண கொடி ஏற்றி இனிப்பு வழங்கப்படும்

113அ வது வட்டத்தில் த.தேவராஜ் (வட்ட செயலாளர்) தலைமையில் (27-11-2023)காலை: 9:00 மணி இடம்: தருமாபுரம் பிரதான சாலை (வட்ட கழக அலுவலகம்) அருகில் ஆற்காடு சாலை கார்ப்பரேஷன் லேன் ஆகிய இடங்களில் கழக கொடி தோரணங்கள் கட்டி ஒலிபெருக்கி அமைத்து கழக இரு வண்ணக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்படும்

113 ஆவதுவட்டத்தில் எம் என்.விஷ்ணு (வட்டசெயலாளர்) தலைமையில் (27-11- 2023) காலை:9:00 மணிக்கு இராமகாமத்துபுரம் கழக கொடி தோரணங்கள் கட்டி ஒலிபெருக்கி அமைத்து கழக இருவண்ண கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்படும்

117 வது வட்டத்தில் எஸ் சத்திய பெருமாள் (வட்டசெயலாளர்) தலைமையில் (27-11- 2023) காலை: 9:00 மணிக்கு வட்டம் கிளைக் கழக அலுவலகத்தில் கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்படும்.

117 வது அ வட்டத்தில் தேனா எல்.தவமணி (வட்டச் செயலாளர்) தலையமயில் (27-11- 2023) காலை:9: மணிக்கு விஜயராகவா சாலை கிரிப்பா சாலை சந்திப்பில் கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கிஇ பள்ளி மாணவ மாணவிகள் உபகரணங்கள் வழங்கப்படும்.

118 வது வட்டத்தில் கோ.யுவராஜ் (வட்ட செயலாளர்) தலைமையில் (27-11- 2023) காலை:9:00 மணிக்கு வி.வி.கோவில் 2 வது தெரு புதுப்பேட்டை கிளை கழகத்தில் கொடியேற்றி இனிப்புகள் வழங்கப்படும்

118 வது அ வட்ட தலைமை: எஸ்.எம்.கே. ராமன் வட்ட செயலாளர் 1,நாள்: (27-11- 2023) திங்கட்கிழமை காலை:9:00 மணி 1,இடம்: இளங்கோ சாலை,முத்தையா தெரு,நல்லன் தெரு, வரதராஜபுரம், பிள்ளையார் கோவில் தெரு, பீர்க்காரன் தெரு, எல்லையம்மன் காலனி, ஆகிய பகுதிகளில் கழக கொடி தோரணங்கள் கட்டி ஒலிபெருக்கி அமைத்து கழக இருவண்ண கொடியேற்றி பள்ளி மாணவ மாணவிகளுக்கு பள்ளி உபகரணங்கள் இனிப்புகள் வழங்கப்படும்

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளும் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்பி,

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ, நுங்கை வி.எஸ்.ராஜ், தொகுதி பார்வையாளர்

கலை கதிரவன், ஜெ நற்குணநாதன், பா இராபர்ட், எம்.வெற்றிச்செல்வி மாணிக்கம், எம்.ஆர்.ஜம்புலிங்கம், கோ. ரவி, மு.வெங்கடேசன், டி. வையலட் மேரி , எம். ஜெயக்குமார், பா.பிரகாஷ், ஜே.என்.எச்.இம்ரான், ஆருண்,

என்.மோகன்வேல், கே.குட்டி, பா.பாலச்சந்தர், வி.தினேஷ்குமார், எம் என் நந்தினி பிரேமா, பி.திருமலை, யு.மல்லிகா மற்றும் அனைத்து அணிகளின்

மாவட்ட,பகுதி, அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் முன்னாள் இந்நாள் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறயுள்ளார்.

### பகுதி செயலாளர் இரா.துரைராஜ் தலைமையில்

# சைதை கிழக்கு பகுதிக் கழகச் செயற்குழு கூட்டம்!

### கோ.வி.லெனின்- எஸ்.குணசேகரன் பங்கேற்பு!

சென்னை, நவ. 27-

சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல் படி சைதை கிழக்கு பகுதி செயற்குழு கூட்டம் இன்று (27.11.2023 - திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு நேருநகர் நெடுஞ்செழியன் தெருவில் உள்ள சைதை கிழக்கு பகுதி திமுக அலுவலகத்தில் பகுதி செயலாளர் இரா.துரைராஜ் ஆகிய எனது தலைமையில் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், மின்னல் கந்தப்பன், பகுதி அவைத்தலைவர் இ.முருகேசன், துணை செயலாளர்கள் ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கி யம், மு.பாக்கியலட்சுமி, பொருளாளர் ஆர்.அருணகிரி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது

கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் கோ.வி. லெனின், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்குகிறார்கள் மேலும் 23.11.2023 அன்று மாவட்ட கழக கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

எனவே கூட்டத்தில் சைதை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பகுதி பிரதிநிதிகள் மற்றும் ஒவ்வொரு வடிவத்திலும் உள்ள பாக முகவர்கள் (PLA2) அனைவரும் குறித்த நேரத்தில் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயாளர் இரா.துரைராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்



திருப்பத்தூர் மாவட்டம், நாட்டறம்பள்ளி மேற்கு ஒன்றியம், கே.பந்தாரப்பள்ளி ஊராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவத் துறை சார்பில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டி.பாஸ்கர் பாண்டியன் தலைமையில் நடைபெற்ற "கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாமில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், மக்களைத் தேடி மருத்துவ பெட்டகம் வழங்கி சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் வருவாய் அலுவலர் பானு, துணை சுகாதார இயக்குநர் செந்தில்குமார், ஒன்றியக்குழு தலைவர் வெண்மதிமுனிசாமி, வட்டாட்சியர் குமார், ஒன்றியச் செயலாளர் டி.சாமுடி, எம்.சிங்காரவேலன், ஜெயாசரவணன் மற்றும் மருத்துவ குழுவினர், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குடிமங்கலம் ஜெயராணி மஹாலில் 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கூட்டுறவு சங்கங்களுக்கு டிராக்டர்களை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சொ.சீனிவாசன், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் சா.ராஜமாணிக்கம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.